தனிப்பிரதி - ரூ. 20/- ஆண்டு சந்தா- ரூ. 200/-

# முத்தமிழ் நேசன்

அக்டோபர் 2022 மலர் I இதழ் 9 இனிக்கும் இலக்கிய இதழ்



பொன்னியின்செல்வன் கிளப்பிய சர்ச்சை!

## ராஜராஜசோழன் ஓர்

## இந்துவா?

## அமெரிக்க முத்தமிழ் குழுமங்கள் எடுக்கும் சீர்மிகும் விழாக்கள்!

# தடைதாண்டு..!

இலக்கை உன்னக்கென இதயத்தில் நிறுத்தி

வேகமும் விவேகமும் கவசமாய் அணிந்து

முன்னேறி அனுதினம் தடுமாறாது
தடைதாண்டு

பிழைகள் என்றால் திருத்தும் செய்து

தோல்வியின் பாடம்

நினைவில் சுமந்து

பயிற்சியும் முயற்சியும் மூச்செனக் கொண்டு

மலையும் தரையெனத் தாண்டிடு

தோழா!

-தமிழ்மாமணி தாழை இரா.உதயநேசன்



# முத்தமிழ் நேசன்

**இனிக்கும் இலக்கிய இதழ்**

**அக்டோபர் 2022 மலர் 1 இதழ் 9**

**நிறுவனர்**

**தாழை இரா.உதயநேசன்**

**ஆசிரியர்**

த.அமுதா

**ஆசிரியர் குழு**

முனைவர்
ஜோ.சம்பத்குமார்
கவிஞர் செ.வீரமணி
த.ஓவியா

**வடிவமைப்பு**

ம.சேவியர்

**அச்சு**

M.S ஆப்செட் ராயப்பேட்டை



**அலுவலக முகவரி**

முத்தமிழ் நேசன்
எண்:10, முதல் தெரு,ஸ்ரீராமபுரம்
ஆம்பூர் – 635 802
திருப்பத்தூர் மாவட்டம்


## தலையங்கம்

# இது நம் திருவிழாக்காலம்

தித்திப்புகள் திரண்டு வருகின்றன. காரணம், அமெரிக்க முத்தமிழ்க் குழுமங்களின் நிறுவனர் ஐயா தமிழ்மாமணி தாழை.இரா.உதயநேசன் அவர்கள், சில முன்னெடுப்புகளை கையில் எடுக்க இருக்கிறார்.

அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இரண்டாம் பட்டமளிப்பு விழா, கோலாகலமாக சென்னையில் 22 ஆம் தேதி அரங்கேறுகிறது. இதில்– தமிழின் சிறந்த ஆளுமைகள் 15 பேருக்கு, மதிப்புறு முனைவர் பட்டத்தை நமது அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம் வழங்கிச் சிறப்பிக்க இருக்கிறது. அதன்பின் குறும்படப் போட்டிகளுக்காக பரிசளிப்பு விழாவும் சீரோடும் சிறப்போடும் நடக்க இருக்கிறது.

அதேபோல், நவம்பர் 5, 6 தேதி களில் அமெரிக்க முத்தமிழ் இலக்கியப்பேரவை தன் இலக்கியத் திருவிழாவை நடத்துகிறது.

இது தவிர ஆம்பூர் தலைமையகத்தைச் சார்ந்தும் பல்வேறு நலத்திட்ட விழாக்களை ஐயா அவர்கள் நடத்துகிறார்கள். இதற்கிடையே தீபாவளியும் அதன்பங்கிற்கு இனிப்பு கொண்டுவருகிறது. வாழ்வை இலக்கியமாய்க் கொண்டாடுவோம்.

**த.அமுதா**
ஆசிரியர்

இதழுக்குப் படைப்புகளை அனுப்ப விரும்பும் படைப்பாளிகள்,

யுனிகோட் ( unicode ) எழுத்துருவில் மட்டுமே தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.

படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:
**mutamilnesan2022@gmail.com**



# சிவப்பு உருவம்

**( அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவை நடத்திய‘சிவப்பு உருவம்’ என்ற தலைப்பினான சிறுகதைப்போட்டிக்கு வந்த கதைகளில் சில...)**

நடுவர்:கவிஞர் ந.தாமரைச்செல்வி!

ஊரிலேயே மிகவும் தைரியசாலி என்று பெயர் பெற்றவன் முருகன். அவரது மனைவி கம்சலா மகள் சுவாதி மகன் சுகுமார்.

சுகுமாரும் அப்பா மாதிரி தைரியசாலி என்று வெளியில் சொல்லிக் கொள்வான். ஆனால் இராத்திரியில் ஏதாவது சத்தம் கேட்டால் பயந்து விடுவான். சுகுமாரின் தைரியம் கம்சலாவுக்கும் சுவாதிக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் முருகன் தைரியசாலி என்றே நம்பினார்கள்

முருகன் அந்த கிராம திரையரங்கத்தில் மேலாளர். இரண்டாவது ஆட்டம் முடிஞ்ச பிறகு இரவு ஒரு மணிக்கு சைக்கிளில் தினமும் வீட்டிற்கு வருவான். வந்ததும் காபி, தேநீர் வேண்டும் என்று அளப்பறையும் செய்து விட்டுத் தான் படுப்பான். தினமும்

இப்படியே தொடர ஒருநாள் தேநீரைக் கொடுத்துவிட்டு கம்சலா போய்ப் படுத்து விட்டாள்.

முருகன் நள்ளிரவில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த போது மின்சாரம் நின்றது. பிறகு தெருக்கதவைச் சாத்தாமல் இருப்பதைப் பார்த்துவிட்டு, கதவைச் சாத்தும் போது சிவப்பான ஒரு உருவம், சிவப்புத் துண்டைத் தலையில் போர்த்திக் கொண்டு கைகூப்பி நிற்பது போல நிற்க "அய்யோ! பேய்!" என்று அலறினான் முருகன். அலறல் சத்தம் கேட்டு கம்சலா, சுகுணா, சுகுமார் எழுந்து ஓடிவந்தனர்.

"என்னாங்க!" என்றாள் கம்சலா. "ஒன்றுமில்லை கம்சலா, போய்ப்படுங்க" என்று வேகமாகக் கதவைச் சாத்திவிட்டு வந்து படுத்தான். அந்த சிவப்பு உருவம் நினைவில் வந்து வந்து போக தூக்கமே தொலைந்து போய் தூக்கம் வந்த சமயம் மின்சாரம் வந்து தொலைக்காட்சி இயங்கியதால் வந்த சத்ததம் கேட்டு முருகன் "பேய்! பேய்! சிவப்பு பேய்!" என்று கத்தினான். கம்சலா தொலைக்காட்சியை நிறுத்தி விட்டு, விபூதி குங்குமத்தை முருகனின் நெற்றியில் பூசிவிட்டு படுத்துக் கொண்டாள்.

சுகுணா,"அம்மா! அப்பாவும் தம்பி மாதிரி தைரியசாலி தானா?" என்றதும், சிரித்துக்கொண்டே "தூங்குடீ" என்றாள்.

"அப்பா தான் தைரியசாலி என்று நினைத்தோம். அப்பாவும் நம்மள மாதிரி தானோ?" என்று தனக்குள் சிரித்துக் கொண்டே தூங்கினான் சுகுமார்.

அடுத்த நாள் கம்சலா கேட்ட போது, "ஒன்றுமில்லை. தொலைக்காட்சியில் பேய் படம்" என்றான் முருகன். அடுத்தநாள் வேலை முடிந்து வரும் போதே பயந்து கொண்டே தான் வீட்டிற்கு வந்தான். வீட்டின் முன்பு யாரும் இல்லை என்றதும் அவசரமாகக் கதவைச் சாத்திவிட்டு படுத்துவிட்டான். கதவு தட்டும் சத்தம் கேட்டது. "கம்சலா! என்ன சத்தம்" என்றான். "நீங்களே பாருங்க" என்றாள்.

கதவைத் திறந்த போது, அங்கே சிவப்பு உருவம் நிற்க, தைரியத்தை வரவழைத்துக் கொண்டு "யார் அது?" என்று அருகில் சென்று பார்த்தால் "அட பரமகுரு, என்னய்யா?" என்றதும் "ஒரு உதவி வேணும்" பதில் வந்தது. "இந்த நேரத்தில் இந்த வேடத்தில் உதவியா பரமகுரு. உன் கருத்த உருவம் உன் சிவப்பு போர்வை. பேயோ பிசாசோ என்று பயந்து விட்டேன். காலையில் வா" என்றான். பின்னால் கம்சலா, சுகுணா, சுகுமார் நின்றிருந்ததைக் கவனித்த முருகன் "போய்ப் படுங்க" என்று அதட்டிவிட்டு நன்றாகத் தூங்கினான்.

— ப. பன்னீர் செல்வம்,
செங்கல்பட்டு.

அருள் ஒரு ஏழை விவசாயி மகன்.

மஞ்சு ஊரில் பெரிய செல்வந்தரின் மகள். இவர்கள் இருவரும் பாடசாலையில் படிக்கும் போதே நட்பு ஏற்பட்டுக் காதலாக மாறியது. இது இருவரின் வீட்டாருக்கும் தெரியாது.

அருள் மேற்படிப்புக்காக பல்கலைக் கழகம் சென்றான். மஞ்சுவின் வீட்டார் படிப்பை இடையில் நிறுத்தி வைத்தியர் ஒருவரை திருமணம் செய்து வைக்க ஏற்பாடுகள் செய்தனர்.

இந்தத் திருமணத்தை விரும்பாத மஞ்சு வீட்டை விட்டு ஓடி விட்டாள்.

இச்செய்தி ஊரெல்லாம் பரவியது. மஞ்சுவின் குடும்பத்தினருக்கு இந்நிகழ்வு பெருத்த அவமானத்தை ஏற்படுத்தியது..

மஞ்சு வீட்டார் எவ்வளவு தேடியும் மஞ்சு கிடைக்கவில்லை.இந்த நிகழ்வு நடந்து பல வருடங்கள் சென்றதால் ஊருக்கே மறந்து போய் விட்டது.

பல வருடங்களின் பின் ஊருக்குள் ஒரு சிவப்பு உருவம் நடமாடுவதாகத் தகவல் அடி பட்டது. பல இடங்களில் தேடியும் அந்த உருவம் கிடைக்க வில்லை. ஊர் மக்களும் பெரிதாக அலட்டிக் கொள்ளவும் இல்லை.

ஊருக்குள் ஆடுகள், மாடுகள், கோழிகள் திருட்டுப் போகும் ஒரு செய்தி அடிபட்டது. இது தொடர்பான கள்வனும் அகப்படவில்லை.

ஒரு நாள், வயலில் பன்றிக் காவலுக்குச் சென்று திரம்பிய சிலர், ஒரு சிவப்பு உருவம் நகர்ந்து செல்வதை அவதானித்து, பலர் ஒன்று சேர்ந்து அந்த உருவத்தைச் சுற்றி வளைத்தனர். சுற்றி வளைத்தவர்கள் போட்ட சத்தத்தில் ஊரே ஒன்று சேர்ந்தது. சிவப்பு உருவத்தைப் பிடித்து ஒரு மரத்தில் கட்டினர்.

அப்போது அந்த உருவம் பேசத் தொடங்கியது.....

"நான் கந்தனின் மகன் அருள். நான் பெரியவீட்டுக்காரரின் மகள் மஞ்சுவைக் காதலித்து. அவளுடன் ஓடிச் சென்று திருமணம் செய்து கொண்டேன். எங்களுக்கு ஒரு குழந்தையும் பிறந்தது. இதை அறிந்து வந்த மஞ்சுவின் குடும்பத்தினர். என்னை அடித்துக் குற்றுயிராக்கிவிட்டு மஞ்சுவைக் கொண்டு சென்று ஒரு அறையில் பூட்டி வைத்துள்ளனர். அவள் பைத்தியமானவள் போல் நடித்துக் கொண்டிருக்கிறாள்.

அவளைச் சந்திக்க நடுநிசி நேரத்தில், மறைந்து வந்து சந்தித்துவிட்டுச் செல்வேன். குழந்தைக்கு என்ன நடந்தது என்று எனக்குத் தொரியாது" என்றான் அருள்.

எல்லோரும் அருளை அனுதாபத்துடன் நோக்கினர். இவ்வளவு அநியாயம் செய்துள்ளனரே பாவிகள் என்று கூறிய பொது மக்கள், பொலிசாரின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

மஞ்சுவின் அப்பாவைக் கைது செய்து விசாரித்த பொலிசார். மஞ்சுவையும் குழந்தையையும் மீட்டெடுத்து அருளிடம் ஒப்படைத்தனர்.அருள் மஞ்சுவின் அப்பாவை மன்னித்து விடுங்கள் என்று வேண்டிக் கொண்டதற்கமைய பொலிசார் எச்சரித்து விடுவித்தனர்.

மஞ்சுவின் பைத்தியம் சரியாகும் வரை குறிப்பிட்ட தொகையினை அவர்களுக்கு மாதா மாதம் செலுத்தும் படி பொலிசார் கட்டளை இட்டனர். ஐயா! மிகவும் நன்றி.எனக்குப் பைத்தியம் இல்லை பைத்தியம் போல் நடித்தேன் என்றாள் மஞ்சு. பெரியவீட்டுக்காரர் அருளின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டார்.

**– எம்.எச்.எம்.மன்சூர்,**
**சிறி லங்கா**

மல்லிகா தோட்டத்தில் கழனிகளுக்கு, நீர் பாயும் மடைகளை ,திறந்து விட்டுக் கொண்டிருந்தாள். களையெடுக்க வந்த கூலியாட்கள் சென்றுவிட்டனர்.

அவர்களுக்கும் சித்தப்பா வீட்டிற்கும் ஒரேகிணறு என்பதால் முறைவைத்து நீர் இறைத்தனர்.

ஆதலால் நேரம் சென்றாலும், நீர் இறைக்க மடைகளைத் திறந்து விட்டுச் செல்வாள். பயப்படமாட்டாள். ஆண்பிள்ளை போல் தந்தை அவளை வளர்த்தார். அவரது மரணம் அவள் குடும்ப சுமை தாங்க வேண்டிய தாயிற்று. இருண்ட பிறகே வேலை முடிந்து ,காலையில் அம்மா கொடுத்த கஞ்சி கலயத்துடன் புறப்பட்டாள். மல்லிகா அம்மா சோறாக்கி வச்சிருக்கும், கருவாடு குழம்பு மணக்கும். என்ற நினைவோடு எட்டி நடை போட்டு நடந்தாள் வெரசா.

பின்னால் யாரோ வரும் சப்தம். திரும்பிப் பார்த்தபடி வீட்டிற்கு வந்தாள். ஒரு மாதமாக இதேநிலை. ஊரில் ஆங்காங் கே, பெண்பிள்ளைகள் காணாமல் போயினர். ஒருநாள் அலுவலகம் சென்று திரும்பிய மாமன் வீரனிடம் நிலைமையைச் சொல்லி வருந்தினாள்.

அவனோ நாளை முதல் நான் உனக்கு காவலாக வருவேன் வருந்தாதே என்றும், கைபிடிக்க போகும் உன்னைப் பாதுகாப்பேன். என்றான் காதலுடன். மல்லிகா அன்றும் இருட்டிய பிறகே, வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருந்தாள். காலடிச் சப்தம் வெகு அருகில். சிவப்பு உருவம் ஒன்று அவளைப் பிடிக்கக் கைநீட்ட, யாரென்று தைரியத்துடன் கேட்டாலும் மனம் நடுங்க கால்கள் தடுமாறிச் சாய்ந்தாள்.

மாமன் மகனும் அவளைத் தேடி வந்தான். அவனைப் பார்த்த சிவப்பு உருவம் மறைந்தது. வீரன் தேடி பார்த்தான். கண்ணுக்கு புலப்படவில்லை.

வீட்டிற்கு மல்லிகாவை அழைத்து வந்தான். அத்தைக்குத் தெரியாமல் விசாரணை செய்தான். மல்லிகா காய்ச்சல் வந்து படுத்து விட்டாள். மாமன் மகன் வீரன் அத்தை அனுமதியுடன் யாருக்கும் தெரியாமல் மல்லிகா வீட்டில் தூங்காது விழித்திருந்தான். பலநாள் திருடன் சிவப்பு உருவம் வந்தது. கட்டிப் பிடித்து சண்டை யிட்டு சிவப்பு உருவத்தைக் கம்பத்தில் கட்டி வைத்தான். விடிந்ததும் பஞ்சாயத்தைக் கூட்டி பலரைக் காவு வாங்கிய, பெண்களை பயமுறுத்திய அந்த சிவப்பு உருவத்தை ஒப்படைத்தான்.

அவ்வுருவம் , சிவப்பு உருவம் அல்ல, மணியக்காரரின் செல்வப்புத்திரன். பெண்பித்தன், பணக்காரன். தன்னை யாராலும் ஒன்றும் செய்யமுடியாது என்ற திமிர். நன்றாக உதைத்ததோடு ஊரைவிட்டுப் போகச் சொல்லி உத்தரவும்போட்டனர். பஞ்சாயத்தார். மணியம் நல்லவர், மகனை நல்லவனாக வளர்க்காத தால், தலைகுனிந்து மன்னிப்புக் கேட்டு நகரத்திற்குச் சென்றார். நகரத்திலாகிலும் அந்த சிவப்பு உருவம் திருத்தி வாழட்டும்.

**– நாகம்மாள் நீலகண்டன்.**

**யா**னைப்படையில் மிகப்பெரிய பலம் வாய்ந்த நாடு சடுதி, யானையின் கொட்டகையில் பயிற்சி யானை மாரியின் பாதுகாவலன் கோமுகி.

பழைய காவலன் என்பதாலும், அடங்காத யானையும் அடங்கும் அவனின் அங்குசத்துக்கு என்பதாலும், மரியாதை பெற்றவன்.

நல்ல குளிர்காலம் அது, சில நாட்களாக கோமுகி இரவில், மாரியை தட்டி விட, அது தனது தும்பிக்கையை எடுத்து மதில் மீது வைத்து விட, அதன் வழியே மதிலை அடைந்து, யானையின் இடுப்பில் கட்டப்பட்ட வடத்தை இழுத்து கீழே போட்டு இறங்கி விடுவான், யானையின் மீது போர்த்தப்படும் சிவப்பு கம்பளத்தை போட்டுக்கொண்டு ஓரிடம் சென்று திரும்ப வருவான் வந்ததும்,

மதிலின் வெளியே போட்ட வடத்தை பிடித்து மதிலை அடைந்து, அதனை இழுத்து ஆட்ட, யானை எழுந்து மதில் மீது தும்பிக்கையை நீட்டி வைக்க, அதை பிடித்து இறங்கி விட்டு தங்கி விடுவான்.

அரசவை கூடியது, வேகமாக வந்த உள்ளூர் ஒற்றன், மந்திரியிடம் ஓலைச்சுருளை நீட்ட, அதைப் பிரித்து வாசித்தார் மந்திரி.

"அரசே, சில நாட்களாக சிவப்பு உருவம் ஒன்று நமது யானைக் கொட்டகையின் பக்கம் உலவுகிறது" மந்திரி வாசித்ததும்,

"அரசே ..தகவல் ஊர்ஜிதமானதுதான், அதில் ஐயம் இல்லை, நான் விடை பெறுகிறேன் உத்தரவு தாருங்கள்" என ஒற்றன் கூற.

அரசன், மந்திரியை பார்க்க, சில பொற்காசுகள் ஒற்றனிடம் மந்திரி வழங்க, "அரசே...உத்தரவு பெறுகிறேன்"என நடந்தான் ஒற்றன்.

— மு.ஜாஃபர் ஷா

மதுரை பாண்டிய மன்னனின் ஆலோசனை மண்டபம்.

இரவின் இருட்டைப் போக்க இரண்டு விளக்குகள் மட்டும் எரிந்துக் கொண்டிருந்தன.

அமைச்சர் அறிவுடை நம்பியும் படைத்தலைவர் மதிவாணனும் இருக்கைகளில் அமர்ந்து இருந்தனர் .

"படைத்தலைவரே , இப்போது நமது பாண்டிய நாட்டின் நிலைமை உங்களுக்கு நன்கு தெரியும் அல்லவா?" ஆம், அமைச்சரே, நமது நாட்டின் மன்னர் செழியன் வேந்தன் இறந்து விட்டார்.. அதனால் அவரது மகன் நெடுமாறன் மன்னராகப் பொறுப்பு ஏற்று உள்ளார்.'

"உண்மை தான். தற்போது நாடு அமைதி இல்லாத நிலையில் உள்ளது ' அப்போது, மன்னன் நெடுமாறன் வேகமாக வந்து , தனது ஆசனத்தில் அமர்ந்தான் .

"ஒரு அவசர செய்தி வந்துள்ளது . நமது நாட்டில் சிவப்பு உருவம் ஒன்று அலைகின்றது . அது பல கொலைகள் செய்து விட்டு , மறைந்து விடுகிறது என்று கேள்விபட்டோம் அல்லவா?'

"ஆம் ,அரசே '

"அந்த சிவப்பு உருவம் பிடிபட்டு விட்டது . அதனால் தான் இந்த நடு இரவில் உங்கள் இருவரையும் வரச் சொன்னேன்"'.எங்கே இருக்கின்றது அந்த சிவப்பு உருவம் ? என்று ஆச்சரியத்துடன் கேட்டார் அமைச்சர்.

மன்னன் கைகளைத் தட்டினான். இரண்டு காவலர்கள் சிவப்பு உடை அணிந்த ஒரு உருவத்தை இழுத்து வந்தனர்.

தலை முதல் கால் வரை சிவப்பு உடை அணிந்து இருந்தது அந்த உருவம் .

“ம், அவனது முகத்திரையை நீக்குங்கள்” காவலர்கள் வேகமாக அவன் தலையை மூடி இருந்த சிவப்பு உடையை அகற்றினர் .

“நீயா ?” என்று அதிர்ச்சியில் எழுந்து நின்றார் அமைச்சர் .

“ஆம் அமைச்சரே, ஒற்றர் படைத்தலைவன் வீரகேசரி தான் நான் ?”

“நீயா இத்தனை நாட்களும் , இத்தனை கொலைகளும் செய்தது ?” என்றான் மன்னன் .

“ஆம் அரசே” நீங்கள் அரசராகப் பதவியேற்று சில நாட்கள் தான் ஆகின்றன. நம் நாட்டைச் சுற்றிலும் பல எதிரிகள் உள்ளனர்.

சோழ நாட்டு ஒற்றர்கள் , சேர நாட்டு ஒற்றர்கள் , பல்லவ நாட்டு ஒற்றர்கள் என்று பலர் நம் நாட்டில் உளவு பார்க்கின்றனர் . நம் நாட்டு செய்திகளை உடனே அவர்கள் நாட்டிற்கு அனுப்புகின்றனர் . இவர்களைத் தடுக்க வேண்டும் . எனவே இந்த. சிவப்பு உருவம் பற்றி நமது படைத்தலைவரிடம் சொல்லி அனுமதி பெற்றேன் .’“ ஆம் அரசே ‘ என்றார் படைத்தலைவர் .

“பகல் நேரங்களில் வெளிநாட்டு ஒற்றர்கள் யார் , அவர்கள் எங்கு யாருடன் தங்கி உள்ளார்கள் என்று அறிந்து விடுவேன் . இரவில் அவர்களைக் கொன்று விடுவேன் ” அப்படியா ? என்று வியப்புடன் கேட்டார் மன்னர் .

“ஆம் அரசே, கொலை செய்யும் போது சிதறுகின்ற. இரத்தம் இந்த சிவப்பு உடையில் பட்டாலும் தெரியாது . மேலும் இருட்டில் வேகமாக ஓடி மறையவும் வசதியாக உள்ளது ! “மிகவும் மகிழ்ச்சி ஒற்றரே , எனக்கு தெரியாமலேயே இந்த நாட்டிற்கு நல்லது செய்து வருகின்றீர்கள் தொடருங்கள் உங்கள் பணியை!”என்று வாழ்த்தினான் மன்னன் .

மன்னன் சொன்னதை ஆமோதிப்பது போல் , விளக்கின் தீபங்கள் தலையை ஆட்டின !

**— நற்கவிஞர் நாகராஜன்**

கந்தசாமி அந்த ஊரிலேயே மிகவும் பணக்காரர் ,

நல்ல வசதி படைத்தவராக இருந்தார், அவருக்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள், இரண்டு பெண் ஒருவர் ஆண் மூவரும் படித்துக் கொண்டு இருந்தார்கள்,

இவர் தன்னுடைய விவசாய நிலத்தில் விவசாயம் செய்து வந்தார். மனைவி குடும்பத்தை கவனித்து வருவதால் வீட்டில் எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்,

இவர்கள் வாழ்ந்த ஊருக்கு அடுத்த ஊரில் விவசாயக் காணி ஒன்று விற்பனைக்கு வந்தது, அதை வாங்க விரும்பிய போது “ மனைவி வேண்டாம் எதுக்கு இருக்கிற காணி பூமி போதும்” என்றாள், ஆனால் அவரோ அதை எப்படியும் வாங்கி விட வேண்டும் என்று விலையைக் குறைத்துக் கேட்டபோது அவருக்கே கிடைத்து விட்டது,

அடிக்கடி அதைப் பார்த்து நல்ல மலிவாகக் கிடைத்து விட்டதை நினைத்து

பெருமைப் பட்டுக் கொண்டார் , இந்த முறை எப்படியும் அந்தக் காணியில் விவசாயம் செய்ய உத்தேசித்து ஆட்களை கூட்டிச் சென்று துப்புரவு செய்து வயலை உழுது நெல் விதைக்க ஆயத்தம் செய்து வீட்டுக்கு வந்தார் ,

அவருக்கு ஒரே மகிழ்ச்சி நல்ல விளைச்சல் என்று ஊராரும் சொன்னதால் மனைவியிடமும் கூறி பெருமைப் பட்டுக் கொண்டார்,

இரவு நித்திரையில் அவரைத் திடுக்கிட வைத்தது ஓர் சிவப்பு உருவம்,," ஏய் அந்தக் காணிக்குள் எதற்கு வந்தாய் ?

உன்னைக் கொன்று விடுவேன் போயிடு " அவரை கோபத்துடன் விரட்டிக் கொண்டே இருந்தது"

"எனது காணி அங்கே உனக்கு என்ன வேலை?"

அவர் திடுக்கிட்டு எழும்புவதும் மீண்டும் படுப்பதுமாக மிகவும் கஷ்டப்பட்டார், அடுத்த நாள் மனைவியிடம் சொல்ல, "கோயிலுக்கு பூசை செய்து பார்க்கலாம், அதன்படி பூசை செய்து அந்த தீர்த்தத்தை அங்கு சென்று வயலிலே தெளித்து விட்டு வந்தார்,

இரவு ஒரே பயங்கரம் சிவப்பு உருவம் வீட்டின் உள்ளே வந்து பெரிய சத்தம் மனைவியும் திடுக்கிட்டு எழுந்து பார்த்து உருவம் ஒன்று இங்கும் அங்கும் நடந்தபடி வீட்டுக்குள் வந்து நிற்பதைக் கண்டனர்,

"என்னைத் துரத்தவா பார்க்கிறாய்?

முடியுமா உன்னால்,,?"

" கடனாக வாங்கிய காசுக்கு வட்டி கட்ட முடியாமல் தானே அந்தக் காணியை அபகரித்தான்,,நீ அதை ஆள நினைக்காதே "குடும்பத்தோடு கொன்று விடுவேன்,"

உருவம் பேயாட்டம் போட்டது சத்தம் கேட்டு பிள்ளைகளும் விழித்துக் கொண்டனர்,

விடியற்காலை காணி விற்றவரிடம் சென்று கேட்ட போது "அது பல வருடங்கள் ஆகி விட்டதே" என்றார் ,

"நீங்கள் திரும்ப எடுத்துக் கொண்டு எனக்கு பணத்தைத் தாருங்கள்,"

அவரோ என்னிடம் பணம் இல்லை எதற்கும் பொறுமையாக இருங்கள் "அந்தக் காணியில் வேறு ஏதாவது செய்ய யோசிப்போம்,

மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்,

"அட கடவுளே இப்படியும் பேய்கள் இருக்குமா,,?"மனைவியிடம் பேசிக் கொண்டார்,

"இன்னொருவரைத் துன்புறுத்தி வாங்கியது அதனாலே தான் அந்த உயிர் இப்படிக் கேட்டுத் தொந்தரவு செய்கிறது"

— **புவனா சற்குணம்**

**கனடா**

**அ**ந்தி மாலைப் பொழுதில் அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பிய நான் வந்த களைப்பு என் வீட்டு வேலைகள் செய்யத் தொடங்கினேன்.மாலைச் சிற்றுண்டி,இரவுசமையல்எல்லாவற்றையும் முடித்து கணவருக்கும்,பிள்ளைகட்கும் சாப்பாடு கொடுத்த பின் அடுத்த நாள் காலை,மதிய நேர உணவுகளை மனதில்

எண்ணியபடி வேலையை முடித்து விட்டு நித்திரைக்கு தயாரான போது, “அம்மா தேத்தண்ணி தாங்கோ” இம்முறை கபொ.த உயர்தரம் பரீட்சை எழுத போகும் மகளின் குரல்.தேநீரை தயார் பண்ணி எடுத்துக் கொண்டு அறைக்குள் நுழைகின்றேன். படித்துக் கொண்டிருந்தவள் மீண்டும் படிக்கத் தொடங்கினாள். நானும் அவள் பக்கத்திலேயே படித்து முடியும் வரை இருப்பது வழக்கம்.

அன்றும் வழமை போல் கட்டிலில் அமர்ந்து நானும் அன்றைய பத்திரிகையை படிக்க தொடங்கினேன். மேலே மின்விசிறி சுற்றிக் கொண்டிருந்தது. யன்னலும் காற்றோட்டத்துக்காக திறந்து விட்டிருந்தாள். நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. மழையும் சோவெனப் பொழிந்தது. குளிராக இருந்த போதும் மகள் யன்னல் கதவுகளைச் சாத்துவதற்கு விரும்புவதில்லை. யன்னலூடாக வரும் நிலவையும், நிலவின் நிழல்களையும் ரசிப்பதில் அவாதி விருப்பம் அவளுக்கு.

“அம்மா இங்க பாருங்கோவன் சுவரில் நிழல் விழுந்து இலையள் அசையுது வடிவா இருக்கு” மகள் சொன்னதை ரசித்தபடி இருந்தேன்.

அன்றும் அப்படித்தான். வீட்டின் பின்புறம் நின்ற மரங்கள் காற்றுக்கு அசைவது.சுவரில் சித்திரமாக விழும். நானும் ரசிப்பேன். நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. சரி படுப்போம் என நிமிர்ந்தவள், அம்மா” என வீறிட்டு கத்தினாள் சுவரைக் காட்டியபடி. கத்தினவள் எதைக் கண்டு பயந்தாள் என்பது தெரியவில்லை. அப்போதுதான் பார்த்தேன் ஒரு உருவம் நிழல்... யன்னல் கம்பியைப் பிடித்தபடியே சிவப்புத் துணியொன்றைத் தலையில் போட்டபடி எம்மை உற்றுப் பார்த்துக்கொண்டிப்பது சுவரில் அப்படியே நிழலாகத் தெரிந்தது. அவ்வுருவம் எம்மையே பார்த்தபடி தெரிந்ததால் என்னால் கத்த முடியவில்லை. மகளை அணைத்தபடி நிற்க , மகளின் சத்தம் கேட்டு ஓடி வந்த மகனும் என் கணவரும் ஓடி எம்மிடம் வருவதற்கிடையில் படீரென யன்னல் கதவு சாத்தப்படும் சத்தம் . நடுங்கிப் பேச நா எழாமல் நிற்க, பக்கத்து அறை யன்னலையும் படீரென அடித்து சாத்தும் சத்தம் கேட்டது. திருடன்... திருடன் எனக் கத்தினோம்.

எல்லா பின் விளக்குகளையும் ஒளிர விட்டு, கணவரும் மகனும் கதவைத் திறந்து பார்க்க நினைத்தபோது, நான் விடவில்லை. அன்று இரவு முழுவதும் பயந்த மகள் கேவிக் கேவி அழுதபடியே இருந்தாள். அதிகாலை எழுந்து யன்னல் பக்கம் பார்த்தபோது மழைப் பெய்து விட்டிருந்ததால் காலடி சுவடுகள், ஆம் வந்தவன் திருடன்தான். (இப்போது நினைத்தாலும் எமக்கு அச்சிவப்பு உருவம் பயத்தை தருவதாகவே இருக்கின்றது. இதே போன்று பக்கத்து இரண்டு வீடுகளில் இத்திருடன் சென்றிருந்தமையை புரிந்து கொண்டோம்... இன்று நினைத்தாலும் அவ்வுருவம் மனக்கண்ணில் நடமாடுகிறது.

மூன்றாம் நாள் அடுத்தத் தெருவில் அந்தத் திருடன் பிடிபட்ட தகவல் கிடைத்தபோது மனதில் நிம்மதி எழுந்தது.

# உண்மை சுதந்திரம் வேண்டும்

'உண்மை சுதந்திரம் வேணும்' என்ற தலைப்பில் நடந்த 10 வரிக்கவிதைப்போட்டிக்கு வந்த படைப்புகளில் சில மட்டும்..

நடுவர்: கவிஞர் அ.பாண்டுரங்கன்

காட்டுக்குள்ள பாருங்க கானல் காற்றுங்க
வெந்திடும் மரங்களும் தந்திடுமா நிழலுங்க?.
கண்ணைத் திறந்து காட்சியைப் பாருங்க
மண்ணு வெடிக்கும் மாற்றத்தை யோசியுங்கள்
ஆதாயத்துக்கு பலது வேதாளமா மாறுதுங்க
உண்மை சுதந்திரமே உள்ளத்துக்கு வேணுமுங்க!

– அவிநாசி சோமு சாவித்திரி

உண்மை சுதந்திரம் வேணும் உயர்ந்திட
பெண்ணின் விடுதலை வேணும் மனதினில்
எண்ணஞ் சிறந்திடல் வேணும் பாரினில்
பண்ணுங் கலைகளும் வேணும் வேரினில்
பண்பை வளர்த்திட வேணும் மக்களில்
உண்மையும் உழைப்பும் வேணும் பிள்ளைக்கு
பண்ணிட்ட கல்வியும் வேணும் மாந்தர்க்கு
நன்மைச் சிந்தைகள் வேணும் நாட்டினில்!
தொன்மை காத்திட வேணும் உலகினில்
மேன்மை பெற்றிட வேணும் மனிதமும்!

– சிட்டு. கனகராசன்.

எந்த நாளில் வேண்டுமானாலும் படிக்க
இங்கே குழந்தையை அனுமதி வேண்டும்
கழுதை சுமக்கும் பொதியாய்ப் புத்தகம்
சுமப்பதில் இருந்து பிள்ளைகளை விடுவிக்க
வீட்டுல எப்போதும் அமைதி நிலவிட
உண்மை சுதந்திரம் வேணும் இங்கு!

–கு.கதிரேசன்

ஈனப்புத்தி யகற்றி மனதில் ஊனமகற்றி
சினமதை விடுத்து சிரித்து வாழ்ந்திட
நேர்மறை எண்ணம் கொண்டு
எதிர்மறை எண்ணம் ஒழித்து
நம்பிக்கையை நெஞ்சில் விதைத்து
சுற்றம் ஓம்பி வாழ்ந்திட
உண்மை சுதந்திரம் வேணும்!

–கலைவாணி

சுதந்திரம் வந்திச்சு மனசு மகிழ்ந்திச்சு
அடிமைச் சங்கிலி அறுந்து போச்சுது
ஆனந்தம் வந்து சேரவே இல்ல
நடக்கும் போது நாளுமே தொல்லை
மானுட இதயம் இரக்கம் மறந்தது
மனித நேயம் அழிஞ்சுப் போனது
எல்லாம் கிடைச்சா விடுதலை சுவைக்கும்
பூமி அழகாய்ச் சட்டெனச் சிரிக்கும்!

–தஞ்சை படி வள்ளியப்பன்

ஆனந்த சுதந்திரம் அரங்கத்தில் பேச்சு
ஆண்டுகள் பலவாய் கடந்தும் வந்தாச்சு
ஆண்டி கையில் அழகிய பானையாய்
பாண்டி ஆடிய படியே பவனியாய்...
உணர்ச்சி மறுத்து உணர்வு பெறும்
உண்மை சுதந்திரம் உய்வது எந்நாளோ

–ஜெசிக்குமார்

உழுதுண்டு வாழும் விவசாயிகளுக்கு
உரிய அந்தஸ்து ஒழுங்காகக் கிடைத்திட
உழைப்பிற்கு ஏற்ப ஊதியம் கொடுத்திட
இலவசக் கல்வி எல்லோருக்கும் வழங்கி
படித்தப் பிள்ளைகளுக்கு வேலையும் தந்திட
சாதி சமய சண்டைகள் இன்றி
எல்லோரும் ஒற்றுமையாய் சேர்ந்து இருந்திட
உண்மை சுதந்திரம் உடனடியாக வேணும்!

–அ.பன்னீர்செல்வம்.

வறுமையில் இருந்து விடுதலை என்றோ?
பாலியல் கொடுமைக்கு விடிவுமே உண்டோ?
சாதிக்கு இன்றும் விடுதலை இல்லையே
மதமும் பிடித்து ஆட்டுது தொல்லையே
நாட்டை குறையுமே சொல்வதிலும் தப்பேது?
உண்மைச் சுதந்திரம் கிட்டுவது எப்போது?

–கவிரதன், மதுரை/

போதையில தள்ளாடும் பொல்லாத வாலிபம்
இல்லாத நிலையும் இந்தியாவில் வேணும்
தடையிட்டு மறைக்காது தாவிடும் நீர்நிலைகள்
தெற்கு வரையிலும் எப்போது பாயும்?

–மா.பாலசுந்தரம்

பவழவிழா காண பள்ளிக்கு செல்ல
பவித்ரமாய் நடந்தேன் என்னருகில் பாலகன்
சுதந்திர கொடியுடன் ஓடி வருகிறான்
சுதந்தரகொடி பத்துரூபாய் வாங்கிகொள்ளுங்கள்
ஒரு கொடியை வாங்கிக் கொண்டு அழைத்தேன்
அவனோ உங்களுடன் பள்ளிக்கு வந்தால்
எனக்கு மட்டும் சோறு கிடைக்கும்
எனது பாப்பாவிற்கு யார் தருவார்?
எங்களுக்கு அம்மா இல்லை
கொரானாவில் செத்துப்போச்சு
கண்ணீர் கண்களை மறைக்க உண்மை
சுதந்திரம் தேடி பார்க்கிறேன்–

–நாகம்மாள் நீலகண்டன்

கட்டற்று திரிந்துக் கடமைகள் மறந்துச்
சுற்றித் திரிவதா உண்மைச் சுதந்திரம்?
மனதில் சொல்லில் நடைமுறை வாழ்வினில்
மாசுக்கள் களைந்து மனிதம் தழைக்க
அடிப்படைத் தேவைகள் அடிபட்டுப் போகாமல்
அன்றாடம் இங்கு மன்றாடும் மக்களுக்கு
அவசியம் வேண்டும் சுதந்திர மூச்சே!

–அருணா ரகுராமன்

சாதி மத பேதம் ஒழிந்து
சர்ச்சைக்குரிய ஊழல்கள் அறவே அழிந்து
சட்டம் அனைவருக்கும் சமமாய் திகழ்ந்து
விரும்பிய கல்வியை விருப்புடன் பயின்று
இயற்கை கொடைகளை இடரின்றிப் பகிர்ந்து
உடனே உண்மைச் சுதந்திரம் வேணும்.

–கருப்பத்தூர் காமேஸ்வரன்

பாடுபட்டு உழைக்கிறோம் பசிதான் தீரல
பாமரரா எங்கள பார்க்கவும் ஆளில்லை
அரைவயிறுக் கஞ்சிக்காக அலைகிறேன் தெருவுல
அக்கறையா எங்களை ஆதரிக்க ஆளில்ல
வாங்குன சுதந்திரத்தால வயிறு நிரம்பாது
தானா உழைச்சிதான்
தடைகளைத் தாண்டனுமே!

–கோவை சரவணின்

வயித்துப் பொழப்புக்கே
வாடுறோமே வழியில்லாம
வருசா வருசமா வந்திட்டுப்
போகுதே சுதந்திரநாளு
வாழ்க்கையில மாற்றமோ
இல்லாம. வாடுறோமே
மாடிவீடோ தூக்கத்துக்கு
ஏங்குது தெனந்தோறும்
குடிசையிலே எங்களுக்கோ
கொசுதானே தாலாட்டுது!

–சென்னிமலை அ.சீனிவாசன்

இயற்கை வளங்களை இரவோடு சுரண்டி
மயக்கும் பேச்சினால் மாள்வதோ தேசம்?
உழைப்பவர் கைகளில் எதுவுமே இல்லை
உறுஞ்சி எடுக்கவே தேர்தலும் வருமே
வறுமையைப் போக்கி விடியட்டும் முதலில்
கொடிதனை ஏற்றிக் கொண்டாட்டம் போடலாம்!

– இந்திரன், சுவிற்சர்லாந்து.

இருட்டில கெடப்பவங்க வெளிச்சத்தில வரணும்
மட்டத்துல கெடப்பவங்க விட்டத்துல ஏறோணும்
நீதிக்கண்ணை கட்டாம நேரடியா பார்க்கோணும்
குத்தவாளிக்கு தகுந்த தண்டனை கிடைக்கணும்

– கவிஞர் பட்டிக்குடிக்காடு இரா.கோவிந்தராசு

சுதந்திரம் கிடைச்சிரிச்சா எங்கையா காணலையே
பள்ளி செல்லும் பாலரெல்லாம் பட்டாசுச் சாலையிலே!
மேல்மட்டத்தோர் எல்லாம் மேன்மையாய் பவனிவர
கீழ்மட்டத்தோர் எல்லாம் தரையிலே படுத்துறங்க
உண்மைச் சுதந்திரம் எப்போது கிடைக்குமப்பா?

–கலா புவனேந்திர ராஜா

நெதமுந்தான் காத்திருக்கேன்
நெடுந்தூரம் பாத்திருக்கேன்
ஊருக்குள்ள சேர்ந்திருக்க
ஒருத்தனுக்கும் மனசில்ல
சாதியத்தான் பாக்குறானே
சமத்துவத்தை நீக்குறானே
சேதியத்தான் அறிஞ்சிருந்தும்
நீதியத்தான் கெடுக்கறானே!

–ரமணி ராஜன், சென்னை.



மலர்ந்த சுதந்திரம் மரிக்காமல் காக்கனும்
மகாத்மா காந்தியும் பெருந்தலைவர் காமராசரும்
காட்டிய வழியில் தலைவர்கள் ஆளனும்
மண்ணுக்கும் பொண்ணுக்கும் மறுமலர்ச்சி கிடைக்கனும்
விவசாயம் செழிக்கனும் வறுமை ஒழியனும்
குற்றங்கள் குறைய சட்டங்கள் இயற்றனும்!

–லக்ஷ்மி பகீரதன், பிரித்தானியா

பள்ளி இல்லை படிப்பும் இல்லை
பசிக்கு நல்ல உணவும் இல்லை.
துள்ளி மகிழ வீடும் இல்லை
துடிக்கும் மனதில் அமைதி இல்லை.
வெள்ளம் வந்தால் தூக்கம் இல்லை
விரும்பும் வகையில் உடையும் இல்லை.
அள்ளிக் கொள்ள நண்பர் இல்லை
அனைத்தும் வறுமை தந்த தொல்லை.
உள்ளம் தினமும் தவிக்குது அம்மா
உண்மைச் சுதந்திரம் எங்கே அம்மா?

– கந்தவனம் கோணேஸ்வரன்.

ஆயதங்கள் அனைத்தையும்
அகிம்சையால் செயிச்சோமே
இந்தியத் தாயோட
விலங்கை உடைச்சோமே
உள்ளூர் கொள்ளையர்
வெள்ளையனாய் மாறினரே
தியாகத்தை பொதுநலத்தை
முற்றிலுமாய் மறந்தனரே
அனைவருக்கும் உண்மை
சுதந்திரம் வேணும்!

–இசைக்கவிச்சுடர் சேலம் குருதாஸ்



## பொன்னியின்செல்வன் கிளப்பிய சர்ச்சை!

# ராஜராஜசோழன் ஓர் இந்துவா?

கல்கி அவர்களால்,வரலாற்றுப் பின்னணியில் புனையப்பட்ட ‘பொன்னியின் செல்வன்’ புதினம், இயக்குநர் மணிரத்தினத்தால் பிராமணிய பூச்சுக்களோடு திரைப்படமாக்கப்பட்டு,தமிழர்கள் மத்தியில் பெரும் வசூலைக் குவித்து வருகிறது. படம் பார்க்கும் எவரும், அதற்குள் மறைந்திருக்கும் நுண் அரசியலையோ, படம் திரைமறைவில் பேசும், ஆரிய ஆதரவுக் குரலையோ பெரிதாககக் கவனிக்கவில்லை.

அது தேவையும் இல்லை.ஆனால் இயக்குநர் மணிரத்தினம்,மிகுந்த கவனத்தோடு சோழப்பேரரசர் ராஜராஜனின் வரலாற்றையும் அவர் காலத்திய மாமன்னர்களின்

வரலாற்றையும் கூர் மழுங்க வைத்து, அவர்கள் பேசும் வசனங்களைக் கூட, மலினமாக்கி, மனதிற்குள் ஒருவித சந்தோசத்தில் ஆழ்ந்திருக்கிறார்.

ராஜராஜசோழனை,இயக்குநர் ஏ.பி.நாகராஜனின் படைப்பில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மூலமாக மிக கம்பீரமாகப் பார்த்துவிட்டு,இப்போது அதே பாத்திரங்களை மணிரத்தினம் எப்படி ஆக்கி இருக்கிறார்?எப்படி புலிகளுக்குப் பூனைவேசம் போட்டிருக்கிறார்? என்பதையும் தமிழுணர்வாளர்கள் கவனிக்கத் தவறவில்லை.

இந்தக் கொடுமைகளை எல்லாம் பார்க்க நடிகர் திலகம் சிவாஜி கணேசனோ,இயக்குநர் ஏ.பி.நாகராஜனோ உயிரோடு இல்லை.

வந்தியத்தேவன் என்கிற மாவீரனைக் கூட,பெண்களைக் கண்டு பலவீனமாகி,ஜொள் வடியப் பேசுகிறவனாக சித்தரித்து தங்கள் அரிப்பைத் தீர்த்திருக்கிறார்கள். எது எப்படியோ தமிழ் மாமன்னர்களை வைத்துக் கோடிக்கணக்கில் லாபம் பார்த்திருக்கிறார் மணி. இது ஒரு புறம் இருக்கட்டும்.

இந்த நேரத்தில், ராஜராஜன் யார்? இந்து மன்னரா? என்ற சர்சையும் கிளம்பி புழுதி பறந்துகொண்டிருக்கிறது.

ஆரியர்களும் ஆரிய தாசர்களும்,“ராஜராஜன் இந்துமதத்தைச் சேர்ந்தவன்தான்.அவன் பள்ளிவாசலா கட்டினான்? சர்ச்சா கட்டினான்?. கோயில்களைத் தானே கட்டினான்! அதனால் அவன் இந்துதான்” என்று அரைகுறை அறிவை வைத்துக்கொண்டு அலப்பறை பண்ணிகொண்டு இருக்கிறார்கள்.ராஜராஜன் பல்வேறு மதத்தினருக்கும் சலுகைகாட்டி இருக்கிறான். சமயப் பொறையைக்கடைபிடித்திருக்கிறான்.

ராஜராஜன் காலத்தில் கிறித்தவம் இருந்தது.புத்தம் இருந்தது. சைவ சமயமும்,வைணவ சமயமும் கூட இருந்தன.அப்போது இந்து மதம் என்ற ஒன்று இருந்ததா? இல்லவே இல்லை.

ராஜராஜன் கலத்திலோ,அல்லது 600, 700 ஆண்டுகளுக்குப் பிறகோ கூட இந்துமதம் என்ற ஒன்று இங்கே இல்லை. இந்து என்ற ஒரு சொல்கூட கல்வெட்டுகளிலும் நம் பக்தி இலக்கியங்களிலும் கூட இல்லை.

ராஜராஜன் காலத்தில் சைவவமும் வைணவமும் தழைத்திருந்தது. ராஜராஜன் சைவநெறியைச் சேர்ந்தவனாக இருந்தான் .எனினும் அவன் அன்றிருந்த அத்தனை மதத்தையும் உயர்வாகவே நடத்தினான்.

பிறகு எப்போது இந்துமதம் பிறந்தது? வெள்ளைக்காரன் காலத்தில்தான் இந்து மதம் என்ற சொல்லே உருவானது.

1794-வாக்கில், பிரிட்டிஷ் காலத்தில் நீதிபதியாக இருந்த சர் வில்லியம் ஜோன்ஸ் என்பவர், இங்கே எண்ணற்ற வழிபாட்டு முறைகளும் சமயங்களும் இருப்பதைக் கண்டு குழம்பிப்போய், கிறிஸ்த்தவர்கள், இஸ்லாமியர்கள், சீக்கியர்கள் அல்லாத அனைத்து சமயத்தவரையும் ஒரு பொது வரையறைக்குள் கொண்டுவர நினைத்தார். அப்போது ராம்

லட்சண் கவிபூஷண் என்ற, அப்போது செல்வாக்காக இருந்த பிராமணர், இவர்களை எல்லாம் ஹிந்து என்றுகுறிப்பிடலாம் என்று ஆலோசனை கூற, இதையே ஆரியசமாஜமும் பிரம்மசமாஜமும் வலிறுயுத்த, இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன பிரமண அமைப்பினர் நால்வருணத்தை வலியுறுத்தும் சனாதன தர்மத்தையே தங்கள் மதமாகக் கொண்டிருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படிப்பட்டவர்களால் தான் எல்லோரும் இந்துவாக ஆக்கப்பட்டார்கள்.

திருக்குறள் திராவிடர்களின் வேதம் என்று அடையாளப்படுத்தி இடையில் திராவிட மதம் என்ற கொள்கை எழுந்தது. 1981 மக்கள் தொகை கணக்கெடுப்பு அட்டவணையில் இந்து மதத்திற்கு இணையாக திராவிட மதம் என்ற மதமும் இணைக்கப்பட்டது. (1981 cencsus registers the name of dravida religion with status equal to hindu religion) மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தமிழக முதல்வரானவுடன் தன் மத அடையாளத்தை “திராவிட சமயம்” என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதையெல்லாம் மறந்துவிடக்கூடாது.

ஆங்கிலேயர்காலத்துக்கு முந்தைய எந்த ஒரு கல்வெட்டிலும், இலக்கியங்களிலும் இந்துமதம் என்ற சொல் கூட இல்லை. அதேபோல் நம் தமிழர்கள் வழிபடும் சிவன் தொடங்கி சிறுதெய்வங்கள்வரை, ஆரியர்களின் வேதங்களில் இல்லவே இல்லை.

ஒன்பதாம் நூற்றாண்டில் சங்கரர் கூட ஆறு மதங்களைக் குறிக்க ஷன்மதம் என்ற சொல்லை பயன்படுத்தினார். அதாவது, சிவனை வழிபடுவது சைவம், விஷ்ணுவை வழிபடுவது வைணவம், முருகனை வழிபடுவது கௌமாரம், சூரியனை வழிபடுவது சௌரம், கணபதியை வழிபடுவது காணாபதியம், சக்தியை வழிபடுவது சாக்தம் என்று வகைப்படுத்தியுள்ளார்.



மணிரத்தினம்

ராஜராஜசோழனால்சிதம்பரம்கொயிலில் இருந்து மீட்கப்பட்டதாகச் சொல்லப்படும் சைவத் திருமுறைகளிலும், சமயக்குரவர் நால்வரின் திருப்பதிகங்களிலும், வைணவப் பாசுரங்களிலும் இந்து மதம் என்ற குறிப்புகள் இல்லை. ஏனெனில் பெரும்பாலும் சைவ வைணவர்களாக இருக்கும் நாம் எல்லோரும் இந்துக்கள் அல்ல. ஆகவே ராஜராஜ சோழன் சைவ நெறி நின்ற தமிழ்ப்பேரரசனே.

–மானுடன்

# ஹைக்கூ...

ஆடுகள் தழை தின்னுவது போன்ற படத்திற்கு, அமெரிக்க முத்தமிழ் ஹைக்கூ பேரவைக் கவிஞர்கள் எழுதிய கவிதைகளில் சில...

**நடுவர்: கவிஞர் ரேணுகா ஸ்டாலின்**

வளைக்கப்பட்ட கிளை
மெல்லத் தணிகிறது
ஆடுகளின் பசி.

**–தனம் மீனாட்சிநாதன்**

மேய்ப்பனின் தொரட்டி
வளைந்து காணப்படுகிறது
செம்மறியாட்டுக் கொம்பு!

**–லா. பெனிஸ் தமிழ் மருத்துவர்**

மேய்ச்சல் நிலம்
ஆடுகளுக்கு உணவாகின்றன
தாழ்ந்த கிளைகள்

**–ம.பழனிச்சாமி**


ஆடுகளின் பசி
தெளிவாகத் தெரிகிறது
மேய்ப்பவன் அக்கறை

**–முனைவர் கண்மணி கண்ணன்**

இழுத்து பிடிப்பது
இயல்பாய் உள்ளது
ஆடுகளுக்கு மேய்ச்சல்

**–கவிநிலவன், வெள்ளகோவில்.**





மேய்ப்பவன் கோல்
கூர்மையாகவே
ஆடுகள் பார்வை

**–ம்ஷை.சிவகாமசுந்தரி நாகமணி,சென்னை.**

மரத்தின் இலைகள்
காணாமல் போகின்றன
ஆடுகளின் பசி

**–ஏரூர் எம்.ரி.எம்.அன்ஸார்**

ஆடுகளின் பசி
குறைந்து கொண்டே போகிறது
முதியவர் கைவலிமை

**–வ பரிமளாதேவி**

இலையுண்ணும் ஆடு
பசியாறி மகிழ்கின்றது
பாலூட்டும் குட்டி.!

**– சங்கர்குரு பழனிச்சாமி**

மேய்ப்பனின் முயற்சி
ஆடுகளின் பசியைத் தீர்க்கின்றது
கிளைகளைக் கொண்ட மரம்.

**–சோ. ஸ்ரீதரன், இலங்கை.**

கிளையோடு இலைகள்
மொத்தமாய் கூடி வருகிறது
மேயும் ஆடுகள்!

**–நாகலெட்சுமி இராஜகோபாலன்.**

மேயும் ஆடு
தலைவணங்கி நிற்கிறது
உயர்ந்த மரம்

**–அ. நாராயணசாமி**

உயர்ந்து பணிகின்றன
மரத்தின் கிளைகள்

**–நழீம் ஹனீபா**

மேய்ச்சல் ஆடுகள்
கிளையை வளைக்கின்றன
மேய்ப்பனின் அலக்கு.

**–ஜெய வெங்கட்**

இரைமேயும் ஆடுகள்
மிக எளிதாகிறது மேய்ச்சல்
மேய்ப்பனின் ஒத்துழைப்பு...!

**–செண்பக ஜெகதீசன்**

மந்தைக்கு வேண்டியதை
ஆயன் வழிகாட்டியதும்
பசி தானே தீர்ந்தது

**– வியாத்தன் ச. லக்ஷ்ஹரன்**

ஆடுகளின் தலைகள்
தழையுண்ணும் ஆடு
தலைகீழாகத் தொங்குகிறது
முறிந்த மரக்கிளை.

**–இராஜா. ரமேஷ்**

மேய்ப்பன் இலைகளைப் பறிக்கிறான்
ஆடுகள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றன
வீடு செல்லும் நேரம்

**–பிரேமா ரமணி**

மேய்ப்பவன் ஒத்துழைப்பால்
உணவு கிடைக்கிறது
ஆடுகளின் முயற்சி

**–கரிசல் ஆசிரியர் ச.லதா தேவி**

பசுமை மரங்கள் வெட்டப்படுகின்றன
அதிகரிக்கும் ஆட்டிறைச்சி
விற்பனை

**–கிரிஜா சண்முகம், இலங்கை**

மேய்ப்பவன் துணையோடு
ஆடுகள் சுவைக்கின்றன
வெளிச்ச நேரம்

**–இரா.சி.மோகனதாஸ்**

இப்படி எல்லாம் இரை போட்டால்தான்
அப்படியே காசாகும் ஆடுகள்
செப்படி வித்தை செய்து பிழைக்கின்றான்

**–பாவலர் தஞ்சை தர்மராசன்**

வெள்ளாட்டு மந்தை
முள்ளும் இலையும் சுவைக்கும்
பசித்த வேளையில்.

**–மா.துரைசாமி**

உதவுகின்றான் மேய்ப்பன்
ஆடுகள் இலையைத் தின்கின்றன/
கூடுதலான தன் முயற்சியால்

**–சி,தமிழ்மணி**

நிழல் தரும் மரம்
செழிப்பாக இருக்கிறது
ஆட்டின் வளர்ச்சி

**–இஸ்ஹாக் றிஸ்வான்**

# அமெரிக்க முத்தமிழ்த் தொலைக்காட்சி நடத்தும்

# மாபெரும் குறும்படப் போட்டி!

**பரிசு மழை**

-------------------

முதல் பரிசு : 15000/-

இரண்டாம் பரிசு : 10000/-

மூன்றாம் பரிசு : 5000/-

**மொத்தப் பரிசுத் தொகை : 30000/-**

**போட்டியின் நடுவர்கள்**

**இயக்குநர் ராசி.அழகப்பன்**

**முனைவர் ஆதிரா முல்லை**

**கவிஞர் ஊடகவியலாளர் மானா. பாஸ்கரன்**

**முனைவர் ஓசூர் மணிமேகலை**

**படத்தொகுப்பாளர் நாடன் சூர்யா**

**மற்றும்**

**அமெரிக்க முத்தமிழ் குழுமங்களின் நிறுவனர்**

**தமிழ்மாமணி தாழை. இரா.உதயநேசன்**

***முடிவுகள், படைப்பாளர்களுக்கு முன்னதாகவே அறிவிக்கப்படும்.***

பரிசளிப்பு விழா:

அக்டோபர் 22 மாலை -
சென்னை கோட்டூர்புரம் இணையவழி கல்வியியல் அரங்கம்.
திரைப்பிரபலங்களின் முன்னிலையில் பரிசுகள் வழங்கப்படும்.

# போட்டிக்கு வந்து சேர்ந்த
# குறும்படங்கள்

1 திரு. முத்து விஜயனின் – தன்வினை

2 பி. அஷ்மிதாவின் –குடும்பம்

3 திரு. தருண் ஜெயபாலின்–இனிய தனிமையே

4 ச. ஹரிணியின் –விவசாயியின் வெற்றி

5 கு. ஆகாஷின் –/ முடிவு உன் கையில்

6 ஜெ. சந்தோஷ்குமாரின் – மாற்று

7 கே. தரணிதரனின்– சூஸைட் ( Suicide )

8 கே.எம். முருகனின் –ஆனா.. ஆவன்னா..

9 ஸ்ரீ சிவகுடும்பம் பிலிம்ஸின் –மண்வாசம்

10 அக்சயா அக்சராவின் – என் அப்பா

11 ஸ்ரீமானின் –மன்மதன்

12 முனைவர் கா. விஜயகுமாரியிந் இயற்கை விவசாயம்

13 தமிழ்ப்பெருமானின் – இப்படிக்கு ஆண்மை

14 முஹம்மது அஃபிரித் –குறை ஒன்றும் இல்லை / கயல்

15 விஜய்யின் –எஜிகேசன் ( Education )

16 ந. கண்ணதாசனின் –ஆகச் சிறந்த குற்றம்

17 க. இளங்கரனின் –பணமிலார்

18 கே.ஹரீஷின் – Amigos / வெங்காயம்

19 எஸ். பிரகதீஷின் –கறை ( The-Stain)

20 ஜகராஜின் –ஒரு கனவு

21 தமிழ் பாரதியின் – Pen

22 யூ.றா. அன்னத்தின் –அகிலன் என்ற ஒருவர்

23பாரதி மைந்தனின் –ரோஜா முள்

24 எம். கிருபாகரனின் – மெய்யுணர்

25 ஆ. முருகொனந்தத்தின்–கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்

26 அனந்த் ரவியின் – எழுத்தின் முகம்

# பட்டமளிப்பு விழா-2

## அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழக மதிப்புறு முனைவர் பட்டமளிப்பு விழா!

அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இரண்டாம் மதிப்புறு முனைவர் பட்டமளிப்பு விழா, சென்னை கோட்டூர் புரம் பல்கலைக்கழக இணையவெளி அரங்கில், எதிர்வரும் 22.10.2022 மாலை 4 மணிக்கு, பல்கலைக்கழக வேந்தர் மாண்பமை முனைவர் தாழை இரா.உதயநேசன் அவர்களின் சீரார்ந்த தலைமையில் நிகழ இருக்கிறது.

இதில் பல்துறை அறிஞர்களும் படைப்பாளர்களும் கலைஞர்களுமாக ஏறத்தாழ 15 பேர் மதிப்புறு முனைவர் பட்டத்தைப் பெற இருக்கிறார்கள்.

பட்டம் பெறும் சான்றோர்களை, தமிழகத்தின் பிரபலங்கள் பலரும் வாழ்த்தி உரையாற்ற இருக்கிறார்கள். இந்த நிகழ்வில் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்களும், ஆலோசனைக்குழு உறுப்பினர்களும், பாடத்திட்ட துறைத்தலைவர்களும் பேராசிரியர்களும் ஏனைய நிர்வாகிகளும் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

நிகழ்விற்கு அனைவரும் வந்திருந்து தமிழ்விருந்து பருகுங்கள்!

இதே நாளில் பட்டமளிப்பு விழாவிற்குப் பின்னர், அமெரிக்க முத்தமிழ் தொலைக்காட்சி நடத்திய குறும்படப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா நிகழ இருக்கிறது.

முதல் பரிசாக ரூ 15 ஆயிரமும்

இரண்டாம் பரிசாக ரூ 10 ஆயிரமும்

மூன்றாம் பரிசாக ரூ 5 ஆயிரமும் என தொகைப்பரிசுகள் வழங்கப்படுகின்றன. கூடவே, போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் பாராட்டுச்சான்றிதழும் நிகழ்ச்சியில் வழங்கப்பட இருக்கின்றன.

போட்டியில் தேர்வான முதல் 5 குறும்படங்கள், திரையுலகப் பிரபலங்கள் முன்னிலையில் திரையிடப்படுகின்றன.

குறும்படப் போட்டியின் நடுவர்களும் பங்கேற்கின்றனர்.

விழா ஏற்பாடுகளை, அமெரிக்க முத்தமிழ்க் குழுமங்களின் நிறுவனர் தமிழ்மாமணி முனைவர் தாழை.இரா.உதயநேசன் தலைமையிலான விழாக்குழு, கவனித்துவருகிறது.

## மலைக்கோட்டை மாநகரான திருச்சியில்

## அமெரிக்க முத்தமிழ்க் குழுமங்களின்

# இலக்கியத் திருவிழா!

எதிர்வரும் நவம்பர் 5,6 ஆகிய தேதிகளில் நிகழ இருக்கின்றன.

முதல் நாள் மாலையில் சிறப்புக்கவியரங்கமும், மறுநாள் 6 ஆம் தேதி, சிறுவர்கள் கலை நிகழ்ச்சிகளும், ஹைக்கூ நூல் வெளியீடும், சிறப்புச் சொற்பொழிவுகளும் நடக்கின்றன.

அன்று பிற்பகல், கல்லூரி மாணவியர் கவியரங்கமும், கவிஞர்கள், படைப்பாளர்கள், ஆசிரியர்கள் என அவரவர் துறையில் சிறந்தவர்களுக்கு விருதுகள் வழங்கபடுகின்றன. இரு நாள் நிகழ்விலும் தமிழகத்தின் முக்கியப் பிரபலங்கள் பங்கேற்கின்றனர்.

மலைக்கோட்டை நகரைக் கலைக்கோட்டை நகரமாக மாற்ற, அனைவரும் வருக!

–அமெரிக்க முத்தமிழ் இலக்கியப்பேரவை மற்றும்

அமெரிக்க முத்தமிழ்க் குழுமங்கள்.

# அமெரிக்காவில் வெளியிடப்பட்ட

# கவிச்சுடர் நூல்கள்

அமெரிக்கா முத்தமிழ் பல்கலைக்கழகத்தின் சார்பில் அமெரிக்காவின் இந்தியனாபொலிஸில், அக்டோபர் 2 ஆம் நாள் – கவிச்சுடர் கல்யாணசுந்தரம் எழுதிய 'பனையோலைக் காற்றாடிகள்', 'முற்றத்து நிலவொளி' ஆகிய கவிதை நூல்கள் சிறப்புற வெளியிடப்பட்டன. இதில் பனையோலைக்காற்றாடிகள் நூல்,அமெரிக்காவில் வெளியிடப்படும் முதல் ஹைக்கூ நூல் என்பது குறிப்பிடத்தக்கது.



இவற்றை அமெரிக்கா முத்தமிழ் பல்கலை வேந்தர் முனைவர் தாழை இரா.உதயநேசன் அவர்கள் வெளியிட, இந்தியான தமிழ்ச்சங்க தலைவர் திரு.சத்தியா அவர்களும்'எடிஃபை டெக்னாலஜி நிறுவனத்தின் சி.இ.ஓ. சிவா பெற்றுக்கொண்டு சிறப்புரையாற்றினார். முன்னதாக கல்வாரி லூத்தரன் தேவாலய பாதிரியார் குர்ட் எபோர்ட் , அவர்களின் இறைவேண்டல் நிகழ்வும், அதன்பின் தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடப்பட்டன.

புரவலர் ஜெஃபி அலெக்சாண்டர் தொடக்க உரையாற்றியதும் மேடையில் குமாரி கோபிகாஸ்ரீ, செல்வி பிரணீதா ஆகியோரின் உளம்கவர் பரதநாட்டியம் நடந்தது.

விழாவில் முத்தமிழ் பல்கலைவேந்தர் தாழை இரா.உதயநேசன், தமது தலைமையுரையில் "கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்களின் தமிழ் ஹைக்கூ நூல் இன்று அமெரிக்கா நாட்டில் முதன் முதலில் வெளியிடப்படுகிறது. அதிலும் அமெரிக்க முத்தமிழ் பல்கலைக் கழகம் சார்பில் வெளியிடப்படுகிறது என்பது எங்களுக்கெல்லாம் பெருமையாகும்" என்றார்.

இம்மிகிரேஷன் ஆலோசகர் வழக்கறிஞர் திருமதி மேரி கென்னடி , சி ஐ எம் இயக்குனர் டாக்டர் மார்வின் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.



இந்த விழாவில் கவிச்சுடர் க.நா.கல்யாணசுந்தரம் அவர்களுக்கு, ' மட்சுவோ பாஷோ' விருது வழங்கப்பட்டது. மேடையில் கவியருவி முனைவர் ஆரூர் தமிழ்நாடன், கவிஞர் மு.முருகேஷ், முனைவர் சரஸ்வதிபாஸ்கரன், முனைவர் ஜோ.சம்பத்குமார், அமெரிக்கா முத்தமிழ் பல்கலை ஹைக்கூ பேரவை நிர்வாகி ரேணுகா ஸ்டாலின், ஹைக்கூ இளம் ஆய்வாளர் கவிநயஸ்ரீ, அமெரிக்கா முத்தமிழ் சிறுவர் பேரவை உறுப்பினர் ஹரிணி கவியரசு ஆகியோரின் வாழ்த்துக் காணொளி திரையிடப்பட்டது.

உலகத்தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றத்தின் சார்பில் அமெரிக்கா பல்கலை வேந்தர் தாழை இரா உதயநேசன் அவர்களுக்கு "முத்தமிழ்க் காவலர்" விருது வழங்கப்பட்டது. விழாவில் கவிச்சுடரின் ஏற்புரையுடன் விழா இனிது நிறைவுற்றது. பின்னர் இன்சுவை இரவு விருந்து நடந்தது. தாழையார் முன்னெடுப்பில் இவ்விழா, வரலாற்றுச்சிறப்பு மிக்க விழாவாக அரங்கேறியது.




**- நமது நிருபர்**


AMIP - USA
அமெரிக்கா முத்தமிழ் இலக்கியப் பேரவை
அமெரிக்கா முத்தமிழ் பேரவைக் குழுமங்களின்
முதலாம் ஆண்டுவிழா
நவம்பர் 5 & 6-ஆம் தேதிகளில்
கனிக்கிழமை
மாலை 6 மணி முதல்
விழா இனிதே ஆரம்பம்!
அருண் மகால்,
திருச்சி.
கவிப்பெருமக்கள்
அனைவரையும் அன்புடன்
வரவேற்கிறோம்.!
இவண்,
நிறுவனர், ஆலோசகர்கள்,
நிர்வாக இயக்குநர்கள்,
நிர்வாகிகள் மற்றும் நடுவர்கள்.
அமெரிக்கா முத்தமிழ் பேரவைக் குழுமங்கள்




# அக்டோபர் 16 முதல்..

செலுத்தப்போகும் ஆண்டு சந்தா ரூ.500/- ஆனால் அடையப்போகும் அன்புப் பரிசுகள்!!!

**அதே ரூ 500/- மதிப்பில் ஒரு அழகான புடவை!**

மற்றும்..

**ரூபாய் 300/- மதிப்புள்ள 6 பொருள்கள்:**

1. பிலிப்ஸ் (யூ.எஸ்.பி) USB லைட்
2. MOBILE STAND
3. Pocket Diary
4. Rockerz - Head Phone
5. Fancy Pen
6. Pouch

**இதற்கும் மேலே...**

**சிறப்புப் பரிசு: கீ செயின்**

**சந்தா அனுப்பும் முறைகள்...**

Google Pay | Net Banking

அலைபேசி எண்: **9551999588**

NAME: S. PREMALATHA
AC NO : 1157155000199824
BRANCH : CHENNAI ROYAPURAM
IFSC : KVBL0001157